வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc

PO Box 557 Wentworthville NSW 2145

info@wtsc.org.au
www.wtsc.org.au

# தமிழ் அறிவுப் போட்டிகளுக்கான விதிமுறைகள்

## ஆண்டு 5 முதல் 12 வரை மற்றும் ஆண்டு 10 பரணர்

- ஆண்டு 5 முதல் 12 வரை வகுப்பு மாணவர்களிற்கு அவர்களின் வகுப்புகளில் தமிழ் அறிவுப் தனித்தனியாக போட்டி நடைபெறும்.
- போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றிலிருந்து இரண்டாம் சுற்றுக்கு (அரை இறுதிப்போட்டிக்கு) 8 மாணவர்களும், இரண்டாம் சுற்றிலிருந்து இறுதிப்போட்டிக்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.
- ஒவ்வொரு வகுப்புகளிற்கும் மாதிரி வினாக்கள் எமது இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பாடசாலை இணையத்தளத்தில் (wtsc.org.au) இருந்து மாதிரி வினாக்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### போட்டிக்கான வினாக்கள்

1. வகுப்புக்களில் அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்.
2. தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.
3. தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.

### போட்டி விதிமுறைகள்

#### முதல் சுற்றுப் போட்டி

1. முதல் சுற்று போட்டிக்கான வினாத்தாள் வழங்கப்பட்டும் அதற்கான விடைகளை குறித்த நேரத்தில் எழுதி முடிக்கவேண்டும்.
2. 15 வினாக்களுக்கு மாணவர்கள் பதில் எழுதவேண்டும்
3. 30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
4. போட்டிக்கான வினாக்கள் வகுப்புக்களில் கற்பித்த அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்.
5. தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் தொடர்பான பொது அறிவுகள் என்பன உள்ளடக்கும்.

#### இரண்டாம் சுற்றுப் போட்டி/ அரை இறுதிப்போட்டி

1. இரண்டாம் சுற்று (அரை இறுதிப்போட்டி) போட்டிகள் தனியாக வகுப்புகளில் நடைபெறும்.
2. 15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
3. 30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
4. மாணவர்களிற்கு வினாக்கள் வாசித்து காட்டப்படும். அவர்கள் கொடுக்கப்பட்ட மூன்று அல்லது நான்கு விடைகளில் சரியான பதிலை கூற வேண்டும் (Multiple choice questions).
5. மாணவர்கள் ஒவ்வொருவராக கேட்கப்படும் வினாக்களிற்கு விடையளிக்க வேண்டும்.
6. சில வினாக்களிற்கு விடைகள் கொடுக்கப்படமாட்டாது. மாணவர்கள் சரியான விடையைக் கூறவேண்டும் (Open Questions).
7. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் மாத்திரமே கொடுக்கப்படும்.

8. நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர் ஒருவரும் (பிள்ளைகள் அந்த வகுப்பில் இல்லாத பெற்றோர்) கடமையாற்றுவார்கள்.

**இறுதிச் சுற்றுப் போட்டி/ மூன்றாம் சுற்றுப் போட்டி**

1. இப்போட்டிகள் வினா விடைப் போட்டியாக (Quiz) நடைபெறும்.
2. கால் இறுதிப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாணவர்கள் இப்போட்டிகளில் பற்குபற்றுவார்கள்.
3. போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படும் போது முதலில் மணியை (Bazar) அழுத்துபவரிற்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
4. சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும் (குறைக்கப்படும்).
5. முதல் மாணவன் தவறாக பதிலளித்தால், அடுத்த மாணவர்களிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும், தவறாக பதில் கூறினால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.
6. ஒரு மாணவர் பதிலளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும்.
7. 15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
8. 30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
9. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் கொடுக்கப்படும்.

**பரிசில்கள்/சான்றிதழ்கள்:**

முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களிற்கு பரிசில்கள், சான்றிதழ்ளும் வழங்கப்படும் வழங்கப்படும். இறுதிச் சுற்றுக்கு தெரிவான நான்காவது மாணவருக்கு இறுதிப் போட்டியாளருக்கான சான்றிதழும், இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தெரிவான நான்கு மாணவர்களுக்கும் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். பங்குபற்றிய அனைத்து மாணவர்களிற்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்ளும் வழங்கப்படும்.